பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.471 **நாள்:12.09.2026**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சீ.ரமேஷ் அவர்கள், திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கைப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களுக்கான கண்காணிப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சீ.ரமேஷ் அவர்கள், திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்து இன்று (12.09.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவொற்றியூர் மண்டலம், வார்டு-8க்குட்பட்ட சூரை மீன்பிடித் துறைமுகம் (Tuna Fishing Harbour) முன்புறம் உள்ள எண்ணூர் விரைவுச் சாலையின் சர்வீஸ் சாலைப் பகுதியில் மழைநீர் தேங்குமிடம், வார்டு-7க்குட்பட்ட டி.பி.பி. பாலப் பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் சேதமடைந்த தடுப்புச் சுவர் சீரமைப்பது தொடர்பாகவும், கார்கில் நகர் குளத்தினையும், அதில் மோட்டார் பம்புடன் கூடிய நீர் சேகரிப்புத் தொட்டியின் தயார் நிலை குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட சடையான்குப்பம், ஜோதி நகர் பாலம் பகுதியில் புழல் உபரிநீர் சேருமிடம் (Puzhal Surplus Confluence Point), ஆர்.எல்.நகர் முதல் சடையான்குப்பம் வரையிலான கொசஸ்தலையாறுப் பகுதி, பர்மா நகர் பாலப் பகுதியில் புழல் உபரிநீர் கொசஸ்தலையாற்றில் சேரும் பகுதி, ஆமுல்லாவாயல் பாலப் பகுதியில் உள்ள புழல் உபரிநீர் கால்வாய் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்களில் ஆகாயத்தாமரைகளை அகற்றி, தூர்வாரும் பணியினை விரைந்து மேற்கொள்ளவும், கால்வாய்களில் தண்ணீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் அடைப்புகளை நீக்கி தூர்வாரிடவும், சேதமடைந்த கால்வாயின் தடுப்புச் சுவர்களைச் சீரமைத்துப் பலப்படுத்திடவும், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடித்திடவும், மழைநீர் தேங்கும் பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு மோட்டார் பம்புகளை தயார் நிலையில் வைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், சமையல் கூடங்கள், வெள்ள மீட்பு நிவாரண மையங்களில்

தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னேற்பாட்டுடன் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம், மின் துறை, நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ந.செந்தில் குமார் (திருவொற்றியூர்), திரு.எம்.எல்.விஜய் பிரபு (மாதவரம்), வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர்கள் திரு.ஏ.சங்கர், திரு.பி.அரவிந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத் துறை உள்ளிட்ட சேவைத் துறைகளின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.